மணிப்பூர் கலவரங்கள் உணர்த்தும் அரசியல் பாடமும், படிப்பினையும்–எச்சரிக்கையும்!!

மணிப்பூர் மாநிலம் என்பது இந்தியாவின் எல்லை மாநிலங்களில் ஒன்றாகும். இமயமலை அடிவாரத்தின் வடகிழக்குப் பகுதியின் நிலப்பரப்பில் மலைச்சரிவுப் பகுதியாகவும், அடிப்பகுதியின் நிலப்பரப்பு சமவெளிப்பகுதியாகவும் அமைந்துள்ளது. இங்கு வாழும் மலைவாழ் பழங்குடியினர் இரண்டு இனக்குழுக்களைச் சார்ந்தவர்கள்.

சமவெளிப்பகுதியில் வாழ்ந்து வருபவர்கள் (Meiteis) "மெய்ட்டிஸ்" என்ற பழங்குடி இனக்குழுவாகும். மலைச்சரிவுப்பகுதியில் வாழ்ந்து வருபவர்கள் "குக்கிஸ்" (Kukkis) என்ற பழங்குடி இனக்குழுவாகும். "மெய்ட்டிஸ்" இனக்குழுவைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் "இந்துக்கள்" என அறியமுடிகிறது. மலைச்சரிவு நிலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் என அறியமுடிகிறது.

இந்த இரண்டு இனக்குழுக்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகளுக்காக மோதல்கள் ஏற்படுவதுண்டு. மணிப்பூர் மாநிலத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி, பைரோன்சிங் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்றியஅரசும், பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்திய ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி நடைபெறுவதால், அந்த மாநிலத்தில் உள்ள பிரச்சினைகளை விரைவாக தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்களும், சூழ்நிலைகளும் நிரம்பவே உண்டு என்பதை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், இந்தப்பிரச்சனை கடந்த மே மாதம் தொடங்கி உச்சநீதிமன்றம் தன்னெழுச்சியாக (Suomoto) இந்தப் பிரச்சினையின் கடுமையான தாக்கத்தை உணர்ந்ததோடு அந்தப் பிரச்சனையை கவனத்தில் எடுத்துக்கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமட்டும் மாநில அரசோ, ஒன்றிய அரசோ காலத்தே கண்டுகொள்ளவுமில்லை, உரிய கவனமும் எடுத்துக் கொள்ளவில்லை.

கடந்த மே மாதம் தொடங்கி இந்த இரண்டு இனக்குழுக்களுக்குமிடையில் மணிப்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலவரங்களையும், துப்பாக்கிச் சூடுகளையும் மாநில அரசோ அல்லது ஒன்றிய அரசோ கவனத்தில் எடுத்துக்கொண்டு, உரிய தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதை "குக்கி" இனக்குழுவைச் சார்ந்த பா.ஜ.க. வின் சட்டபேரவை உறுப்பினர் பாவோலிய ன்லால் ஹொக்கி பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த பேட்டியில், "பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் மணிப்பூர் பிரச்சனைக்கு முக்கியத்துவம் தரவில்லை, மாறாக அமெரிக்கப் பயணத்திற்குதான் ஆர்வம் காட்டினார். இதுவரையிலும் பிரதமரைச் சந்திக்க முயற்சித்தும் இயலவில்லை. இந்தப்பிரச்சனையில் பிரதமர் வாய்திறந்து பேசிட 79 நாட்கள் ஆனது!

இதற்கிடையில் போலீஸ் கமொண்டோக்களுடன் மெய்ட்டிஸ் (Meiteis) போராளிக் குழுக்கள் நடத்திய தாக்குதல்களே இந்த வன்முறைக்கு 99 சதவிகிதம் காரணம்", என்று தெரிவிக்கிறார் (ஆதாரம்: தினகரன் 24.07.2023, பக்கம் எண் 1).

மணிப்பூரில் மே மாதம் தொடங்கிய இந்த இனக்கலவரம், அதன் விளைவான துப்பாக்கிச்சூடு, வீடுகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் தீயிட்டுக் கொளுத்துதல், பெண்களை நிர்வாணப்படுத்துதல், பாலியல் தொல்லை கொடுத்தல், கற்பழிப்புகள் என கலவரத்தின் தாக்கம் பல்வேறு அருவருக்கத்தக்க வடிவங்களாக உச்சம்பெற்றது. மணிப்பூர் போர்க்களமானது.

இதில் பாதிப்புக்குள்ளானவர்கள் "குக்கி" இன மக்களாகும். தற்பொழுது ஊடகங்கள் வாயிலாக கிடைக்கும் செய்திகள் குருதி உறைந்து போகும் அளவிற்கு, மனிதாபிமானம் கிஞ்சிற்றும் இல்லாத கொடூரமான கொடுஞ்செயல்களாகும் என்பதில் ஐயமில்லை. உச்சநீதிமன்றத்தின் கவனத்திற்கு வருவதற்கு முன்பாகவே கடந்த மே மாதம் தொடங்கி, "குக்கி" இனமக்கள் இந்த கொடுஞ்செயல்களுக்கும், சித்திரவதைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

"குக்கி" இனமக்கள் இப்படி கொடூரமாகத் தாக்கப்படுவதற்கு தெரிவிக்கப்படும் காரணங்களில் ஒன்றுதான் குக்கி இனமக்கள் பெரும்பாலும், "கிறிஸ்தவர்கள்", இவர்களுக்கு எதிரான "மெய்ட்டிஸ்" (Meiteis) இனமக்கள் பெரும்பாலும் "இந்துக்கள்" என்றும், இவர்கள் பாரதீய ஜனதாக்கட்சியின் ஆதரவாளர்கள் என்றும் செய்தி ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இரண்டு இனக்குழுக்களும், இந்திய குடிமக்கள் என்பதை மணிப்பூர் மாநில அரசும், இந்திய ஒன்றிய அரசும் எண்ணிப்பார்க்க தவறியதுதான் இந்த மாபெரும் கொடுமைகளுக்கும், காட்டுமிராண்டித் தனமான சித்திரவதைகளுக்கும் காரணம் என்பதை இந்திய குடிமக்கள் அனைவரும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பன்முகத்தன்மை கொண்ட, பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்திய நிலப்பரப்பில், மதவெறிச் சிந்தனைகள் தலைதூக்குமானால் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மணிப்பூர் மாநில அரசும், இந்திய ஒன்றிய அரசும் எண்ணிப்பார்த்து மின்னல்வேகத்தில் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டாமா? என்பதே இந்திய ஒன்றியத்தில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் துயரம் தோய்ந்த கேள்வியாகும். இந்திய நிலவியல் பரப்பில் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் இந்தியக் குடிமக்களாகவேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு மணிப்பூர் "கொடூரங்கள்" எத்தகைய உணர்வை எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்ற கேள்வியே இன்று அனைத்துத்தரப்பு மக்கள் மத்தியிலும் உருவாகியிருக்கிறது.

இந்தக் கொடூரங்களின் தாக்கமும், பிரதிபலிப்பும் எஞ்சிய இந்திய நிலப்பரப்பில் வாழும் பல்வேறு மதம் சார்ந்த மக்களுக்கு எத்தகைய தாக்கத்தையும், அச்சத்தையும் உருவாக்கும் என்பதை வேண்டுமென்றே மணிப்பூர் மாநில அரசும், இந்திய ஒன்றிய அரசும் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே எண்ணிப்பார்த்து நடவடிக்கை எடுக்க மறுத்திருக்கிறது என்றுதான் நடுநிலையாளர்கள் தங்கள் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறார்கள்.

கடந்த மே மாதமே கலவரங்கள் உச்சமடைந்திருக்கின்றன. மே மாதம் 15ஆம் தேதியே 18 வயது பெண் கடத்தப்பட்டு பலரால் கற்பழிக்கப்பட்டிருக்கிறார். அதற்கான முதல் தகவல் அறிக்கையும் காவல் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வு மணிப்பூர் தலைநகர் இம்பால் நகர் கிழக்குப்பகுதியில் நடந்துள்ளது (Ref : Hindu Dt. July 23rd, 2023. "An 18 year old, who was abducted, assaulted, and gang raped in Imphal East in Manipur on May 15, approached the police on Friday after which a Zero First Information report (FIR) was registered, a police source said").

இந்தச் சம்பவத்திற்கு முன்பாகவே மணிப்பூர் தலைநகர் இம்பால் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த "குக்கி" இனக்குழுவைச் சார்ந்தவர்களை ஆயுதம் தாங்கிய குழு கல்லூரி வளாகத்திற்குள்ளேயே புகுந்து, வேட்டையாடிய செய்திகள் கடந்த மே மாதம் 3, 4 தேதிகள் நடைபெற்றுள்ளது.

விரிவான செய்திகள் ஆங்கில இந்துப் பத்திரிகையில் 23.07.2023ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ளது (Kuki women students of Manipur University recount horror of targeted attack by mob. Hindu Dt. 23.07.2023, Page No.10). இதே காலகட்டத்தில் மே மாதம் 4ம் தேதி, 21 வயது நிரம்பிய, கல்லூரியில் இளங்கலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த "குக்கி" (KukiZo) இனக்குழுவைச் சார்ந்த மாணவன் மணிப்பூர் முதலமைச்சர் பைரோன் சிங்கை விமர்சித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டமையால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் காண்பித்துவிட்டு, காவல்துறையின் பாதுகாப்பில் கொண்டு செல்லப்படும் பொழுது 800க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் காவல்துறை வாகனத்தை மறித்து அந்த இளைஞனை காவலர்கள் பாதுகாப்பிலிருந்து வெளியே இழுத்து கோரமாகத் தாக்கி கொலை செய்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்வை தேசிய மனித உரிமை ஆணையம் பதிவு செய்துள்ளது (The KukiZo youth who was arrested for shoring a post on Biren Singh was being taken away from Court to Jail on May 4 when a mob of around 800 men and women intercepted the police vehicle, dragged the youth out and beat him to Death. NHRC records case as custodial death, issues notices. Hindu Dt. : 24.07.2023, Page No.: 8).

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்

இத்தகைய கோரமான நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிந்தும், அறிந்தும் மாநில அரசோ, ஒன்றிய அரசோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை யெனில் அதற்கு அரசியல் உள்நோக்கம் தானே காரணமாக இருக்க முடியும்.

உச்சநீதிமன்றம் தன்னெழுச்சியாகப் பிறப்பித்த உத்தரவினால் மணிப்பூர் மாநில அரசும், ஒன்றிய அரசும் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் 24.07.2023ஆம் தேதியிட்ட "இந்து" ஆங்கில இதழில் தரப்பட்டுள்ளது (Hindu Dt. : 24.07.2023). அதில் 290 பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டதாகவும், 4000க்கும் மேற்பட்ட காவல்நிலைய ஆயுதக்கிடங்கிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஆயுதங்களில் 1600 ஆயுதங்கள் மட்டும் கைப்பற்றியுள்ளதாகவும், இன்னும் கலவரம் கட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் உச்சநீதிமன்ற உத்தரவிற்குப் பின்னர்தான் என்றால், உச்சநீதிமன்ற உத்தரவு இல்லையென்றால், மணிப்பூர் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க இயலவில்லை. இதயம் படபடக்கிறது, கண்கள் குளமாகின்றன, எண்ணிப்பார்க்க முடியாத இந்தக் கொடுமைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியது ஜனநாயகத்தில் மாநில மணிப்பூர் அரசும், ஒன்றிய அரசும்தான் என்பதில் எள்ளின் முனையளவு கூட ஐயமில்லை.

ஆனால், இந்தநிகழ்வுகள் இந்தியதுணைக்கண்டம் முழுமையும் பல்லாயிரம் ஆண்டு காலமாகப் பரவி வாழ்ந்துவரும் பல்வேறு இனம் சார்ந்த, மதம் சார்ந்த மக்களுக்கு இன்று பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் ஒன்றியத்தில் நடந்து கொண்டிருக்கும் ஆட்சியின் மறுபக்கம் பற்றிய பாடமும், படிப்பினையும், எச்சரிக்கையும் ஆகும்!!

சென்னையில் நேற்று முன்தினம் (27.07.2023) தமிழ்நாடு அரசு மற்றும் இங்கிலாந்து அரசுடன் இணைந்து சென்னை அருகே தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இங்கிலாந்து சுற்றுச்சூழல் உணவு மற்றும் ஊரக வளர்ச்சி துறை செயலாளர் தெரோஸ் காஃபி, இங்கிலாந்து எரிசக்தி பாதுகாப்பு துறை அமைச்சர் கிரஹம் ஸ்டுவார்ட், ராயல் தாவரவியல் பூங்கா இயக்குநர் ரிச்சர்ட் ஜார்ஜ் டெலெரால், இங்கிலாந்து நாட்டுக்கான சென்னை தூதரக அதிகாரி ஆலிவர் பல்லாட்சேட், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் திருமதி ஜெயந்தி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொழில்துறை பகுதிகளில் ஏற்படும்

காற்று மாசுபடுதலைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை.29-

நாட்டின் முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை பகுதிகளில் அதிக அளவில் காற்று மாசுப்படுதல் காரணமாக காற்றின் தரம் மோசமடைந்து வருவதை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:

நாட்டின் முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை பகுதிகளில் காற்று மாசுப்படுதல் காரணமாக காற்றின் தரம் மோசமடைந்து வருவதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் முக்கிய நகரங்களின் தொழில்துறை பகுதிகளில் காணப்படும் மாசுதுகள்களின் அளவு; அதைத் தடுக்க ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்ட சீரிய நடவடிக்கைகள்/திட்டங்கள் யாவை?

காற்று மாசுபடுதலை எதிர்த்துப் போராட கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில வாரியாக மற்றும் ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

நாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் காற்று மாசுபாட்டைத் தடுக்க அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்கள் என்ன?

இதற்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் ஒன்றிய அமைச்சர் அஷ்வினி குமார் சௌபே எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

தொடர்ந்து 5 ஆண்டுகளாக தேசிய சுற்றுப்புற காற்று தர தரநிலைகளை (NAAQS) மீறிய PM10 செறிவுகள் அடையாத 123 நகரங்களை அமைச்சகம் அடையாளம் கண்டுள்ளது. காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்ய, MoEF&CCதேசிய சுத்தமான காற்று திட்டத்தை (NCAP) தொடங்கியுள்ளது, இது நாட்டின் 131 நகரங்களில் காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்வதற்கான காலக்கெடு, தேசிய அளவிலான உத்தி. தேசிய, மாநில மற்றும் நகர மட்டங்களில் தூய்மையான காற்று செயல்திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள் மற்றும் அவற்றின் ஏஜென்சிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்கள் ஆகியவை அடங்கும்.

மேலும், இந்த பகுதிகளில் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துவதற்காக தொழில்துறை பகுதிகளை கடுமையான மாசுபட்ட பகுதிகள் மற்றும் கடுமையாக மாசுபட்ட பகுதிகள் என வகைப்படுத்த ஒரு விரிவான சுற்றுச்சூழல் மாசு குறியீடு (CEPI) முறை உருவாக்கப்பட்டுள்ளது. 69 தொழில்துறை பகுதிகள் முக்கியமான/கடுமையாக மாசுபட்ட பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த தொழில் துறை பகுதிகள் தொடர்பான செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள்/மாசுக் கட்டுப்பாட்டு குழுக்கள் CEPI செயல்திட்டங்களை செயல்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

2022-23 நிதியாண்டிற்கான NCAP இன் கீழ் உள்ளடக்கப்பட்ட 131 நகரங்களின் PM 10 செறிவுகளின் விவரங்கள் ஆவனமாக்கப்பட்டு வருகிறது

காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்ய கடந்த 5 ஆண்டுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளின் விவரங்கள் குறித்தும் விரிவாக அட்டவணை படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ்

தொழில்முனைவோருக்கு கடன் வழங்க வங்கிகள் தயக்கம் காட்டுவது ஏன்?

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி

புதுடெல்லி, ஜூலை 29-

தமிழ்நாட்டில் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் தொழில்முனைவோருக்கு கடன் வழங்க சில வங்கிகள் தயக்கம் காட்டுவது ஏன்? என்றும் இது குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைக்கு என்ன என்றும், கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்ட வாரியாக பயனடைந்த பெண் தொழில் முனைவோர் எண்ணிக்கை பற்றிய விபரங்கள் குறித்தும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு இந்திய ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை இணையமைச்சர் பானு பிரதாப் சிங் அளித்த பதில் வருமாறு:

"PMEGP இன் கீழ் குறு நிறுவனங்களை அமைக்கவும், திட்டங்களின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார நம்பகத்தன்மையின் அடிப்படையில் தங்கள் சொந்த கடன் முடிவுகளை எடுக்கவும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவு களை செயல்படுத்தும் முகமைகள் மூலம் வங்கிகள் மதிப்பீடு செய்கின்றன.

அதன்படி தமிழ்நாட்டில் PMEGPஇன் செயல்திறன் அதிகமாக உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 6140 விண்ணப்பங்களுக்கு ரூ.178 கோடியே 91 இலட்சத்து 66 ஆயிரம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், MSME அமைச்சகம் மற்றும் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (KVIC) PMEGP திட்டத்தின் கீழ் கடன் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க அதிக நிராகரிப்பு விகிதங்களைக் கொண்ட வங்கிகளுக்கு அமைச்சகம் அவ்வப்போது கடிதங்களை வழங்குதல்; அற்பமான காரணங்களுக்காக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதைக் குறைக்க வங்கிகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்; மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு (SLBC) கூட்டங்கள், மாநில அளவிலான கண்காணிப்புக் குழு (SLMC) கூட்டங்கள், வங்கியாளர்கள் மறுஆய்வுக் கூட்டங்கள், மண்டல மறுஆய்வுக் கூட்டங்கள், உயர்மட்ட வங்கியாளர்கள் மறுஆய்வுக் கூட்டங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல்; விண்ணப்பதாரர்கள் தரமான முன்மொழிவுகளைத் தயாரிப்பதில் உதவிட பல்வேறு தொழில்களில் 1000க்கும் மேற்பட்ட மாதிரி விரிவான திட்ட அறிக்கைகள் (DPR) PMEGP இணைய தளத்தில் பதிவேற்றம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

மேலும் கடந்த ஆண்டு மட்டும் தமிழ்நாட்டில் 2,856 பெண்களுக்கு PMEGP திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டு 75 கோடியே 49 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கோவையில் மணிப்பூர் கொடூரங்களை தடுக்க தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து,, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மாலதி தலைமையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், ஒருங்கிணைந்த மூன்று மாவட்டங்களின், மகளிர் அணி தொண்டரணி அமைப்பாளர்கள் மேரிராணி, கமலம், மங்கையர்க்கரசி, ரங்கநாயகி, கனிமொழி, ரதி, மாநகராட்சி மேயர் கல்பனா மற்றும் மாநகராட்சி நிலை குழு, வார்டு குழுக்களின் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மூத்த முன்னோடிகள் பங்கேற்றனர்.